# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 02.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1201/B/20**

திரு.R.ராமகிருஷ்ணன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஓமாலூர் வட்டம்,
சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.R.ராமகிருஷ்ணன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், திருமதி.தமிழரசி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஓமாலூர் வட்டம், சேலம் மாவட்டம் அவர்கள் பங்கேற்றார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 24.10.2019 தேதியிட்ட மனுவில், 1987-ம் வருடத்திய நில உடமை மேம்பாட்டு திட்ட “அ” பதிவேட்டின்படி சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் கிராமம், புல எண்.140, 141, 142, 143, 144, 145 ஆகிய நிலங்களுக்கு 1937ம் வருடத்திய செட்டில்மெண்ட் “அ” பதிவேடு நகல் மற்றும் 1905ம் வருடத்திய செட்டில்மெண்ட் “அ” பதிவேட்டு நகல் மற்றும் 1872ம் வருடத்திய “அ” பதிவேடு நகல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், ஆவண காப்பகம், எழும்பூர், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல் ஏதும் கிடைக்கப்பெறாததால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 19.12.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்தும் தகவல் கிடைக்கப்பெறாததால், மனுதாரர் 03.02.2020 தேதியிட்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கும் பொருட்டு 1வாரகாலம் அவகாசம் வழங்கப்பட்டு, மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் கோரிய தகவல்களை வழங்க ஆணையிடப்பட்டது.

5. மேற்படி ஆணைக்கிணங்க ஒ.மு.2710/2020/அ3 கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்து, மனுதாரரின் சான்றொப்பமிட்ட கடிதத்தினை இவ்வாணைய மின்னஞ்சலிக்கு முகவரியிட்டுள்ளார்.

6. மேற்படி கடிதத்தில் மனுதாரர், 1937ம் வருடத்திய அ பதிவேடு மற்றும் அதனுடன் இணைந்த தப்சில் லிஸ்ட் மட்டும் பதிவுத் தபால் மூலம் பெற்றுக் கொண்டதாகவும், தான் கோரிய 1905 மற்றும் 1872ம் வருடத்திய அ பதிவேடு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி தகவலானது சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சார்ந்ததாகவும், அவற்றை பெற்றுத் தரவும் கோரியுள்ளார்.

7. மேற்படி மனுதாரர் கோரிய 1905 மற்றும் 1872ம் வருடத்திய அ பதிவேட்டின் நகலினை சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து, ஓமலூர் பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் பெற்று தகவலாக வழங்க ஆணையிடப்பட்டு, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

8. மேற்படி தகவல் குறித்து மனுதாரருக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவினை தாக்கல் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/-(ரா.பிரதாப்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண்.** SA 1201/B/20</u>

<u>**பெறுநர்**</u>

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஓமாலுர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

திரு.R.ராமகிருஷ்ணன்,
பரம்பரை அறங்காவலர்,
அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோவில்,
ஓமலூர் நகர் மற்றும் வட்டம்,
சேலம் மாவட்டம்.

Copy to: File
MP/PA-12.11.20